# கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 4 /2023

### அ.சா. 21 (LW 12 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **நித்திஷ்** | **தொழில்** | |
| **த/க பெயர்** | **முருகேசன்** | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **19.08.2025.** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு  10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2  எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னையில் வளசரவாக்கத்தில் குடியிருக்கிறேன். ஐடி கம்பெனியில் வேலை செய்கிறேன்.  இதற்கு முன்பு நிலக்கோட்டையில் கம்ப்யூட்டர் கடையில் விற்பனை பிரிவில் வேலை செய்தேன்.  கடந்த 2021 ல் காட்டுராஜா என்பவர் ஒரு வீடியோ கொடுத்து அதனை குறுந்தகடாக மாற்றி தர வேண்டும் என்று என்னிடம் கேட்டார். நான் மாற்றி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது அந்த குறுந்தகடு தான். ( அரசு தரப்பில் மேற்படி சாட்சி வழங்கிய 65(B) சான்றிதழை குறியீடு செய்ய முயன்ற போது மேற்படி எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த சான்றிதழ் வழக்கு கோப்பில் இல்லை என்று  அ.சா.20 ஐ விசாரிக்கும் போது இந்த நீதிமன்றம் ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது என்றும், அதன் நகல் குவிமுச 207 பிரிவில் வழக்கில் ஆவணங்கள் வழங்கிய போது எதிரிகளுக்கு வழங்கவில்லை என்றும், எனவே அது தற்போது உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும்  ஆட்சேபிக்கப்பட்டது. மேலும் எந்த கம்ப்யூட்டரில் பதிவிறக்கம் செய்து நகல் எடுக்கப்பட்டது,  எந்த மென்பொருள் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற தகவல் இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டது,  அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் மேற்படி 65 பி சான்றிதழ் இறுதி அறிக்கையுடன் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஆவண பட்டியலில் காட்டப்பட்டுள்ளது என்றும் அது தற்போது உருவாக்கப்பட்ட ஆவணம் அல்ல என சுட்டிக் காட்டப்பட்டது )  மேற்படி சான்றிதழ் அ.த.சா.ஆ. 15.ஆகும். ( அதற்குரிய சிடி ஏற்கனவே அ.த.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1 வது எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் போலிசாரிடம் செல்போனோ, மெமரி கார்டோ தரவில்லை என்றால் சரிதான். எனது கடைக்கு 10 அடி தூரத்தில்தான் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான்.  காட்டுராஜா என்பவரை எனக்கு ஏற்கனவே பழக்கப்பட்டவர் என்றால்

சரியல்ல. காட்டுராஜா என்பவரை போலிசார் பெயர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன விதத்தில் மேற்படி குறுந்தகடு தயார் செய்யப்படவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்திற்கு அருகில் கடை வைத்திருப்பதால் போலிசாருக்கு கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. நான் எந்த குறுந்தகடும் தயார் செய்யவில்லை என்றாலும் சிடி போட்டு தரவில்லை என்றாலும் இது வழக்கிற்காக மேற்படி காட்டுராஜாவாலும், போலிசாராலும் சித்தரிக்கப்பட்டு, எடிட் செய்யப்பட்டு உருமாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 65 பி ஆவணம் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சட்டத்தின் பால் செல்லுபடியாகாது என்றால் சரியல்ல. நான் போலிசார் கேட்டுக் கொண்டன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN
Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.19 20:02:50 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.